தினத்தந்தி



## செஞ்சியில்

# தாட்கோ மூலம் வேலைவாய்ப்பு முகாம்

செஞ்சி,நவ.19– சென்னையில் உள்ள பிரபலதனியார் நிறுவனங்கள் தங்கள் கம்பெனியில் 2 ஆயிரத்து 300 பெண்களை வேலைக்கு தேர்வு செய்ய தாட்கோ ஏற்பாட்டின்படி வேலைவாய்ப்பு முகாம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. முகாமை செஞ்சி ஒன்றியக்குழு தலைவர் ரத்னா கணபதி தொடங்கி வைத்தார்.இதில் வேலைவாய்ப்பு பெற ஏராளமான இளைஞர்களும், பெண்களும் முகாமில் கலந்து கொண்டனர்.வேலைக்கான முகாமில் கலந்து கொண்ட நிறுவனங்களிலிருந்து வந்த அதிகாரிகள் வேலைக்காக வந்த பெண்களிடம் நேர்காணல் நடத்தி தேர்வு செய்தனர். இந்த முகாமை திண்டிவனம்கோட்டாட்சியர் மஞ்சுளா பார்வையிட்டார். அவருடன் தாசில்தார் சங்கரன், தனிதாசில்தார் மணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிச்சைமணி, ராஜசேகரன் ஆகியோர் வந்திருந்தனர். அப்போது திண்டிவனத்திலும் இவ்வாறு வேலைவாய்ப்பு முகாம் நடத்த தாட்கோ மேலாளரை கோட்டாட்சியர் மஞ்சுளா கேட்டுக்கொண்டார்.இந்த முகாம் ஏற்பாடுகளை தாட்கோ மேலாளர் தாமோதரன்,உதவிமேலாளர் ரங்கநாதன், தாட்கோ பயிற்சியாளர் கோவிந்தசாமி ஆகியோர் செய்திருந்தனர்.